CC.No. 118/2025
PW – 2
21.07.2026
பெயர் : சோலையம்மாள்
த/பெ. : மாணிக்கம்
எதிரிகள் ஆஜர்

**<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவ காலத்தில் கோவிந்தம்மாள் மயங்கி கீழே விழுந்துவிட்டதாகத்தான் நான் அக்கம் பக்கம் உள்ள நபர்களிடம் கூறினேன் என்று சொன்னால் சரிதான். மயங்கி கிழே விழுந்ததன் காரணமாக அவரை மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்கள் என்று சொன்னாலும் சரிதான். ஏற்கனவே நான் நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தை போலிசார் சொல்லிக்கொடுத்தன் பேரில் கூறினேன் என்று சொன்னால் சரிதான். நான் பார்த்ததை தான் நீதிமன்றத்தில் கூறினேன். உள்ளபடிக்கே மயங்கி தான் கோவிந்தம்மாள் கீழே விழுந்தார். அவ்வாறு மயங்கி கீழே விழுந்ததில் தான் கோவிந்தம்மாளுக்கு தலையில் காயம்பட்டது என்று சொன்னால் சரிதான்.

**அரசுதரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 25.03.2026ம் தேதி இதேநீதிமன்றத்தில் முதல்விசாரணை சாட்சியமும் குறுக்குவிசாரணை சாட்சியமும் அளித்துள்ளேன் என்றால் சரிதான். நான் சாட்சியம் அளித்த பிறகு நீதிமன்றத்திற்கு வெளியே கோவிந்தம்மாள் இறப்பிற்காக எதிரிகளுடன் சமாதானம் செய்துகொண்டு நஷ்டஈடு பெற்றுக்கொண்டோம் என்றால் சரிதான். எதிரிகளிடம் இருந்து நான் நஷ்டஈடு பெற்றுக்கொண்டதால்

ஏற்கனவே நீதிமன்றத்தில் அளித்துள்ள சாட்சியத்துக்கு முரணாக எதிரிகளை காப்பாற்றவேண்டும் என்ற நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/–சோலையம்மாள்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

**Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**புதுக்கோட்டை.**